செ.வெ.எண்: 87 நாள்: 30.08.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வேளாண்மைத்துறையின் சார்பில் இன்று (30.06.2016) நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று துவக்கிவைத்து பேசியதாவது:-

விவசாயிகள் குறைகளை மனுக்களாக பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தீர்வுகாண விவசாயிகள் குறைதீர்க்கும் பிரதி மாதம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் விவசாயிகளை பயிற்சிக்கு வெளிமாநிலம் அழைத்துச்செல்ல கோரியும், செம்மை நெல் சாகுபடிக்கு மானியம் வழங்க கோரியும், பயிர்க்கடன் வழங்க கோரியும், உழவர் சந்தையில் கடை ஒதுக்கீடு செய்யக்கோரியும் என வரப்பெற்ற 32 மனுக்கள் மீது விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் மழையளவைப் பொறுத்த அளவில் ஆகஸ்ட் 2016ம் மாதத்தில் இயல்பான மழையளவான 112.76 மி.மீக்கு, இதுவரை பெறப்பட்ட மழையளவு 27.05 மி.மீ ஆகும். நடப்பு 2016 ஆண்டுக்கு இம்மாதம் வரை பெறப்பட வேண்டிய இயல்பான மழையளவான 298.67மி.மீக்கு இதுவரையில் பெறப்பட்ட மழையளவு 194.0 மி.மீ ஆகும்.

நடப்பாண்டு நெல் 1983 எக்டர் பரப்பளவிலும், சிறுதானியங்கள் 874 எக்டர் பரப்பளவிலும், பயறுவகை பயிர்கள் 1373 எக்டர் பரப்பளவிலும், எண்ணெய்வித்துப் பயிர்கள் 1897 எக்டர் பரப்பளவிலும், கரும்பு 2157 எக்டர் பரப்பளவிலும், தென்னை 9338 எக்டர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 33 வேளாண்மை விரிவாக்க மையங்களில் 330.81 மெ.டன் நெல் விதைகளும், 25.054 மெ.டன் பயறு விதைகளும், நிலக்கடலை 8.777 மெ.டன் தற்சமயம் இருப்பில் உள்ளது. விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளை வேளாண்மை விரிவாக்க மையங்களிலிருந்து பெற்று சாகுபடி செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. உரிமம் பெற்ற கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை மையங்களிலும் சான்று பெற்ற விதைகள் கிடைக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் பி.பி.டி 5204 இரகத்திற்கு மாற்றாக டி.கே.எம் 13 ரக விதைகள் 2.0 மெ.டன் இருப்பு வைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு தேவையான தரமான உரங்கள் தடையின்றி உரிய நேரத்தில் கிடைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. யூரியா உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைப்பதற்கு ஏதுவாக உரிய முயற்சிகள் மாவட்ட நிர்வாகத்தின் அறிவுரைக்கு ஏற்ப வோளண்மை துறை மற்றும் கூட்டுறவுத்துறை ஆகியவர்கள்ளின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது யூரியா 3966 மெ.டன்னும், டிஏபி 706 மெ.டன்னும், பொட்டாஷ் 890 மெ.டன்னும், 1277 மெ.டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்து வரப்படுகிறது.

மாவட்டத்தில் சிறு தானிய பயிர்களான கேழ்வரகு, கம்பு, சோளம், சாமை, வரகு மற்றும் குதிரைவாலி விதைகள் போதுமான அளவு வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. சிறு தானியங்கள் இயக்க திட்டத்தின் கீழ் சிறுதானிய விதைகள் மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் இதனை பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தரமான விதைகளை விவசாயிகள் தாங்களே உற்பத்தி செய்து கொள்ளும் நோக்கத்தில் விதை கிராமத் திட்டத்தில் அனைத்து ரக நெல், பயறு வகை மற்றும் நிலக்கடலை விதைகளுக்கும் மானியம் வழங்கப்படுகிறது. நெல் விதைக்கு ஒரு கிலோவிற்கு ரூ.10/-, பயறு வகை விதைகளுக்கு ஒரு கிலோவிற்கு ரூ.25/- மற்றும் நிலக்கடலை விதைக்கு ஒரு கிலோவிற்கு ரூ.25/- வீதம் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கர் வீதம் விதைகள் வநியோகம் செய்யப்படுகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 18.08.2016 அன்று சட்டப் பேரவையில் 110 விதியின் கீழ் காவிரி பாசன மாவட்ட விவசாயிகளுக்கு சம்பா தொகுப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டு புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளும் பயன்பெறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்படி சம்பா தொகுப்புத் திட்ட உதவிகளாக நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ள வசதியாக தரிசு நிலங்களில் உழவு மேற்கொள்ளும் பணிகளுக்கு ஏக்கருக்கு ரூ.500/- பின்னேற்பு மானியம், தரமான சான்று பெற்ற உயர்விளைச்சல் நெல் ரக விதைகளுக்கு கிலோவிற்கு ரூ.10/- வீதம் மானியம், நேரடி நெல் விதைப்பு மேற்கொண்ட பகுதிகளில் களைக் கட்டுப்பாடு மேற்கொள்ள வசதியாகக் களைக்கொல்லி பயன்படுத்திட ஏக்கருக்கு ரூ.250/- பின்னேற்பு மானியம், துத்தநாகச் சத்துக் குறைபாட்டினை நிவர்த்தி செய்திட துத்தநாக சல்பேட் பயன்படுத்திட ஏக்கருக்கு ரூ.200/- பின்னேற்பு மானியம், இயந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.600/- பின்னேற்பு மானியம், இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.2000/- பின்னேற்பு மானியம் வழங்கப்படவுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா தொகுப்புத் திட்டம் காவிரி பாசன பகுதிகளான அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி, கறம்பக்குடி, கந்தர்வகோட்டை மற்றும் திருவரங்குளம் வட்டாரங்களில் செயல்படுத்தப்படவுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்திற்கு உழவு மானியம் 18000 ஏக்கர் பரப்பளவிலும், களைக்கட்டுப்பாட்டு மானியம் 12500 ஏக்கர் பரப்பளவிலும், துத்தநாக சல்பேட் மானியம் 3000 ஏக்கர் பரப்பளவிலும், விதைகளுக்கான மானியம் 200 மெ.டன் அளவிலும், இயந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பு மானியம் 2000 ஏக்கர் பரப்பளவிலும், இயந்திரம் மூலம் நெல் நடவு மானியம் 1000 ஏக்கர் பரப்பளவிலும் ரூபாய் 183 லட்சம் மானிய மதிப்பில் செயல்படுத்தப்படவுள்ளது.

மரஎண்ணெய் பயிர்களில் பரப்பினை அதிகரிக்கும் நோக்கத்தில் தேசிய எண்ணெய் வித்து இயக்கத் திட்டத்தில் பயன்படுத்தப்படாத தரிசு நிலங்களில் வேம்பு மற்றும் புங்கம் மரக்கன்றுகளை நடவு செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. வேம்பு மரக்கன்றுகள் நடவிற்கு 1 எக்டருக்கு அதிகபட்சமாக ரூ.17000 பின்னேற்பு மானியமும் (400 கன்றுகள்/எக்டர்) புங்கம் மரக்கன்றுகள் நடவிற்கு 1 எக்டருக்கு ரூ.20000 பின்னேற்பு மானியமும் வழங்கப்படுகிறது. இதுகுறித்த மேலும் விபரங்களுக்கு தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையத்தினை தொடர்பு கொள்ளலாம் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் திரு.அண்ணாமலை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சந்தோஷ்குமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திருமதி.பால்வடிவு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) திரு.மனோகரன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு.அருணாச்சலம், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.சுலைமான், வேளாண் அலுவலர் திரு.பூபதி மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**